**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE  DHARMAPURI**

O.S. No. 16 of 2023

Deposition of   P.W.  1

Name of the Witness:  திரு.ரவி

Date : 26.06.2025

**குறுக்கு   விசாரணை  தொடர்ச்சி**

13) தாவா 1ம் இன சொத்து என் அப்பா பெயரில் 1993ல் வாங்கப்பட்டது. அது 10 சென்ட் நிலம், இரண்டு புளிய மரங்கள் உள்ளது. அந்த சொத்து யாரிடம் வாங்கப்பட்டது என்று தெரியாது. ரூபாய் 10 ஆயிரத்திற்கு வாங்கப்பட்டது. 1500ரூபாய்க்கு முதலில் முத்திரை தாள்கள் வாங்கப்பட்டது. அரசு நிர்ணயம் செய்த விலை அதிகமாக இருந்ததால் ரூபாய் 3500 அரசுக்கு பணம் அதிகமாக செலுத்தப்பட்டது. அந்த கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அந்த கிரைய பத்திரம் பதிவு செய்த போது நான் பதிவு அலுவலகத்திற்கு போயிருந்தேன். 12மணிக்கு பதிவு அலுவலகம் சென்றோம். பதிவு கட்டணமாக ரூபாய் 1500 கொடுத்தார்கள். அதில் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. பதிவு அலுவலகத்தில் ஆவண எழுத்தர் எழுதினார். அவரின் பெயர் எனக்கு தெரியாது.

14) தாவா 4ம் இன சொத்து என் அப்பா பெயரில் 2000ம் வருடம் கிரையம் வாங்கப்பட்டது. அந்த சொத்து ரூபாய் 10 ஆயிரத்திற்கு

ராஜாராம் என்பவரிடமிருந்து வாங்கப்பட்டது. அந்த சொத்தின் செக்குபந்தி எனக்கு தெரியாது. அதில் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. என் அப்பா பெயரில் முத்திரை தாள்கள் வாங்கப்பட்டது, எவ்வளவு ரூபாய் என்று நியாபகம் இல்லை. பாரூர் பதிவு அலுவலகத்தில் 3.00மணிக்கு பதிவு செய்ய கொடுக்கப்பட்டது. அந்த ஆவணத்தை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது.

*15)* தாவா 2ம் இன சொத்து வீடு புதிய திருப்பத்தூர் சாலையில் அமைந்துள்ளது. அந்த வீட்டில் தான் *1, 3, 4,* 5 பிரதிவாதிகள் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். அந்த சொத்து என் தாத்தா பெருமாள்கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. அந்த சொத்து என் தாத்தாவிற்கு பூர்வீக சொத்து, உரிமை ஆவணம் இல்லை. என் தாத்தா பெயரில் சிட்டா உள்ளது. அந்த சொத்து *1955, 1960* ஆண்டுகளில் என் பாட்டி முனியம்மாள் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால் என் தாத்தா, பாட்டி பெயரில் கிரையம் வாங்கப்பட்டது.

*16)* தாவா 3ம் இன சொத்து என் பாட்டி பெயரில் கீரையம் வாங்கப்பட்டது, எந்த வருடம் வாங்கப்பட்டது என்று தெரியாது. 2, 3 இன சொத்துக்கள் என் பாட்டி மூலமாக என் அப்பாவிற்கு வந்த சொத்துக்கள் என்றால் சரிதான். என் அப்பா கிரையம் வாங்கிய சொத்துக்கள், என் பாட்டி பெயரில் உள்ள சொத்துக்கள் தான் தாவா சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை குறித்து என்

அப்பா 1ம் பிரதிவாதியின் மகள்கள் மீது தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் என் அப்பாவின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைக்க உரிமையுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் என் அப்பாவின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் சொத்துக்களில் பங்கு கேட்கவோ, தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்ய சொல்லி கேட்க வாதிகளாகிய எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

17) தாவா 1, 4 அயிட்ட சொத்துக்களை வாங்குவதற்கு நான் பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எவ்வளவு பணம், எப்போது கொடுத்தேன் என்று தாவாவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் பணம் கொடுத்தேன். பி.சா.ஆ.1, பி.சா.ஆ.2, பி.சா.ஆ3 ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்கள் என் அப்பா தான் என் பெயரில் வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. 14.12.2005ல் 2ம் வாதிக்கு என் அப்பா 26 சென்ட் நிலம் ஏலகிரி கிராமத்தில் வாங்கி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. என் அப்பா இறந்த பிறகு வீட்டில் இருந்த 15லட்சம் பணமும், 51 பவுன் நகையும் எனது அம்மாவிற்கு பாகமாக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் அப்பா உயிருடன் இருக்கும் போதே செம்மாண்டகுப்பம் கூட்டுறவு வங்கியில் ரூபாய் 10 லட்சம் என் அம்மா பெயரில் இருந்தது. ஊர்கவுண்டர் கேசவன் மூலமாக என் அம்மாவிற்கு

ரூபாய் *15* லட்சம் பணம் கொடுக்கப்பட்டது என்றாலும், அந்த பணத்தை தான் என் அம்மா செம்மாண்டகுப்பம் கூட்டுறவு வங்கியில் பணத்தை வைப்பீடு செய்தார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் இருப்பது என் அம்மாவும், கேசவனும் என்றால் சரிதான். ஆனால் அதில் கொடுக்கப்பட்ட பணத்தை என் அம்மா கேசவனிடமே கொடுத்து விட்டார். என்னிடம் காட்டப்படும் செம்மாண்டகுப்பம் சேமிப்பு கணக்கு புத்தகம் என் அம்மா பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த கணக்கு புத்தகத்தின் சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.*4*** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

*18)* *2*ம் வாதி பெயரில் சொத்து, என் பெயரில் உள்ளசொத்துக்கள், என் அம்மாவிற்கு கொடுக்கப்பட்ட *51* பவுன் நகைகள் இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. *2*ம் வாதிக்கு திருமணமாகி *40* வருடங்கள் இருக்குமா என்றால், *30* வருடங்கள் இருக்கும். *2*ம் வாதி ஏலகிரிகொட்டாயூரில் குடியிருக்கிறார். *1*, *5* பிரதிவாதிகளுக்கு *2009* *30*ம் தேதி திருமணம் ஆனது. மாதம் சரியாக நியாபகம் இல்லை. நான் திருமணத்திற்கு போயிருந்தேன். அந்த திருமணம் எனது அப்பா, அம்மா பார்த்து செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். *1*, *5* பிரதிவாதிகள் அவர்கள் திருமணம் ஆன நாளிலிருந்து எனது அப்பாவுடன் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான்.

*19)* *6*ம் பிரதிவாதி பாளையம்புதூரை சேர்ந்தவர். தருமபுரி மாந்தோப்பில் குடியிருக்கிறார். அவரது அப்பா, அம்மா பெயர் எனக்கு

தெரியாது. அவருடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை போர் என்று எனக்கு தெரியாது. 6ம் பிரதிவாதி என்ன படித்துள்ளார் என்று தெரியாது. ஆனால் பியூட்டி பார்லர் வைத்துள்ளார். 6ம் பிரதிவாதியின் கணவர் பெயர் பாஸ்கர் த/பெ பாண்டு நாயுடு என்றால் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி எப்போது, எங்கு பிறந்தார் என்று எனக்கு தெரியாது. அபிநயா பாஸ்கருக்கும், 6ம் பிரதிவாதிக்கும் பிறந்தவர் என்றால் சரியல்ல. அவர் விஜயகுமாருக்கும், 6ம் பிரதிவாதிக்கும் பிறந்தவர். 6ம் பிரதிவாதிக்கும், விஜயகுமாருக்கும் 23 வருடத்திற்கு முன்பாக கிருஷ்ணகிரி மாவட்டம் காட்னாம்பட்டி முருகர் கோவிலில் திருமணம் ஆனது, தேதி, மாதம் நியாபகம் இல்லை. அந்த திருமணம் நடந்ததற்கு ஆவணம், போட்டோக்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை,

20) என் மனைவியையும், என் பிள்ளைகளையும் இந்த வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை. 2, 6 பிரதிவாதிகளை இந்த வழக்கில் தேவையே இல்லாமல் 1ம் பிரதிவாதியின் தவறான அபிபிராயம் ஏற்படவேண்டும் என்று இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கும், 2, 6 பிரதிவாதிகளுக்கும் எந்த தொடர்பும், உறவும் இல்லை என்றாலும், 6ம் பிரதிவாதி எனக்கு நெருங்கிய நபர் என்பதால் அவரை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் திருமணமே ஆகவில்லை என்றாலும் அவர்களுக்கு 2ம் பிரதிவாதி பிறக்கவே இல்லை என்றால் சரியல்ல.

21) நாடகம் ஆடி 5ம் பிரதிவாதி அவருடைய மகன்கள் பெயரில் சொத்துக்களை எழுதி வாங்கி கொண்டார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா சுயமாக விருப்பப்பட்டு 3, 4 பிரதிவாதிகள் பெயரில் சொத்துக்களை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், பொய்யான சங்கதிகளை கொண்டு பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.